**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.97/2009**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நீலாவதி | மதம் | : இந்து |
| க/பெ | : பாஸ்கர் ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : வீரராகவபுரம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**05.02.2025**

**பி.வா.சா. 2 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 22.02.1972ம் தேதியிட்டு சாலம்மாள் வகையறா செல்ல கிருஷ்ணமூர்த்திக்கு 8ம் இலக்க சொத்தை பொறுத்து எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் மற்றும் அதன் தமிழ்மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் மற்றும் அதன் தமிழ்மொழிபெயர்ப்பு பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.02.1972 தேதியிட்டு சாலம்மாள் வகையறா சரோஜம்மாளுக்கு 5, 6, 11ம் இலக்க சொத்துக்களை பொறுத்து எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(தமிழ் மொழிப்பெயர்ப்பில் கையெழுத்து இல்லாததால் கிரைய ஆவணம் மட்டும் பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 10.11.1992ம் தேதியிட்டு நீலாவதி அம்மாளுக்கு ஜெயசங்கர் வகையறா எழுதிகொடுத்த பொது அதிகார ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(பொது அதிகார ஆவணம் பி.வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 29.12.1994ம் தேதியிட்டு பாஸ்கர் ரெட்டி அவர்களுக்கு நீலாவதி அம்மாள் எழுதிகொடுத்த தான பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். **(தான பத்திரம் பி.வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 05.7.2007ம் தேதியிட்டு

திருவேலங்காடு கூட்டுறவு நிலவள வங்கி பாஸ்கர் ரெட்டிக்கு எழுதிகொடுத்த அடமான மீட்பு ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(அடமான மீட்பு ரசீது பி.வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 05.06.2006 ம் தேதியிட்ட பட்டா எண்.169 ல் பாஸ்கர் ரெட்டி பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 20.11.2024 ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது பி.வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)